# பகுதி IV

# பகுதி IV

## 2015 ஆம் ஆண்டின் இலங்கை மத்திய வங்கியினதும் இலங்கையிலுள்ள வங்கித்தொழில் நிறுவனங்களினதும் செயற்பாடுகள் மற்றும் தொழிற்பாடுகள் தொடர்பான முக்கிய சட்டவாக்கங்கள்

பக்கம்

1. 2015 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, நிதிச் சட்டம் 1

# 2015ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க, நிதிச் சட்டம்

[2015ஆம் ஆண்டு ஒத்தோபர் மாதம் 30ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

**மதுச்சாலைகள் மற்றும் தவறணைகள் அறவீடு, சீட்டாட்டத் தொழில் அறவீடு, அதிஈட்ட வரி, செல்லிடத் தொலைபேசி தொழிற்படுத்துநர் அறவீடு, செய்மதி அமைவிட அறவீடு, அர்ப்பணிக்கப்பட்ட விளையாட்டு அலை வரிசை அறவீடு, மாளிகை வரி, குடியகல்வு வரி அத்துடன் மோட்டார் வாகன இறக்குமதியாளர்கள் உரிமக் கட்டணத்தை விதிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும் அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அதன் இடைநேர் விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக

1. இச்சட்டம், 2015ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க, நிதிச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

## பாகம் I

### மதுச்சாலைகள் மற்றும் தவறணைகள் அறவீடு

2. (1) இச்சட்டத்திற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டதும் (52ஆம் அத்தியாயமான) மதுவரி கட்டளைச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டதுமான உரிமம் ஒன்றினை 2015, மாச்சு 31ஆம் திகதியன்று வைத்திருந்தவர் ஒவ்வொருவரிடமிருந்தும், (இதனகத்துப்பின்னர் “அறவீடு” எனக்குறிப்பீடு செய்யப்படும்) மதுச்சாலைகள் மற்றும் தவறணைகள் அறவீடு என அழைக்கப்படவேண்டிய இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா அறவிடப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட உரிமமொன்றை வைத்திருப்பவர் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஒன்றுக்கு மேற்பட்ட உரிமங்களை வைத்திருந்தவிடத்து, அவர் அத்தகைய ஒவ்வோர் உரிமம் தொடர்பிலும் அறவீட்டைச் செலுத்த ஆளாதல் வேண்டும்.

(3) அறவீடானது 2015, நவெம்பர் 15ஆம் திகதியன்று அல்லது அதற்குமுன்னர் செலுத்தப்படுதல் வேண்டும்.

(4) அறவீடானது ஆணையாளர் தலைமையதிபதியினால் சேகரிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், சேகரிப்புத் திகதியிலிருந்து பதினைந்து நாட்களினுள் திரட்டு நிதியத்திற்கு அனுப்பப்படுதலும் வேண்டும்.

3. (1) இரண்டாம் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு அறவீட்டைச் செலுத்துவதற்கு தவறுகின்ற எவரேனும் உரிமம் வைத்திருக்கின்றவர், இச்சட்டத்தின் கீழ் தவறுகையாளர் ஒருவராகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) நான்காம் பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய எவரேனும் தவறுகையாளருக்கெதிரான குற்றவழக்குக்கும் அத்தகைய அறவீட்டை அறவிடுவதற்கும் அது தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

4. (1) அறவீட்டுத் தொகை அல்லது அதன் பாகம் தவறுகையில் உள்ளவிடத்து, ஆணையாளர் தலைமையதிபதி, அத்தகைய இடத்தின்மீது நியாயாதிக்கத்தைக் கொண்டுள்ள நீதவானுக்கு, தவறுகைத் தொகை மற்றும் தவறுகையாளரின் பெயர் மற்றும் அவர் கடைசியாக இருந்ததாக அறியப்பட்ட வதிவிடத்தின் அல்லது வியாபார இடத்தின் முகவரியாகிய விபரங்களைக் கொண்ட சான்றிதழ் ஒன்றை வழங்குதல் வேண்டும்.

(2) நீதவான் அதன்மீது, தவறுகையிலுள்ள அறவீட்டுத் தொகையை அறவிடுவதற்காக தவறுகையாளருக்கெதிராக ஏன் நடவடிக்கை எடுக்கப்படக்கூடாது என்பதற்கான காரணத்தைக் காட்டுமாறு அவருக்கு அழைப்பு விடுத்தல் வேண்டும்.

(3) தவறுகையாளரால் போதிய காரணம் காட்டப்படாவிடின், தவறுகையிலுள்ள அறவீட்டுத் தொகையானது நீதவானின் கட்டளைமூலம் அத்தகைய தவறுகையாளர் மீது நீதவானால் விதிக்கப்பட்ட குற்றப்பணமொன்று என்றாற் போன்று அறவிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அறவிடப்பட்டுள்ளபோது திரட்டு நிதியத்திற்கு வரவு வைக்கப்படுவதற்கென ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்பப்படுதலும் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவின்கீழ் விதிக்கப்பட்ட குற்றப்பணத்துக்கு மேலதிகமாக, (52ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின்கீழ் இயைபான தவறுகையாளருக்கு வழங்கப்பட்ட உரிமம், 2015, திசெம்பர் 31ஆம் திகதியிலிருந்து பயனுறுவதாக ஆணையாளர் தலைமையதிபதியினால் இல்லாதாக்கப்படலாம்.

5. இச்சட்டத்தின் இப்பாகத்தில், சந்தர்ப்பம் வேறுவகையில் தேவைப்படுத்தினாலன்றி-

“ஆணையாளர் தலைமையதிபதி” என்பது (52ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 7ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட மதுவரி ஆணையாளர் தலைமையதிபதி எனப் பொருள்படும்.

## பாகம் II

### சீட்டாட்டத் தொழில் அறவீடு

6. (1) (இதனகத்துப்பின்னர் இப்பாகத்தில், “அறவீடு” எனக் குறிப்பீடு செய்யப்படும்) சீட்டாட்டத் தொழில் அறவீடு என அழைக்கப்படவேண்டிய 2015, சனவரி 29ஆம் திகதியன்றுள்ளவாறான நூறு கோடி ரூபாவைக் கொண்ட அறவீடு ஒன்று சீட்டாட்டத் தொழிலில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு ஆளிடமிருந்தும் அறவிடப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆளொருவர் ஒன்றுக்கு மேற்பட்ட சீட்டாட்டத் தொழிலில் ஈடுபட்டுள்ளவிடத்து, அத்தகைய ஆள் அத்தகைய சீட்டாட்டத் தொழில் ஒவ்வொன்று தொடர்பிலும் அறவீட்டைச் செலுத்த ஆளாதல் வேண்டும்.

(3) அறவீடானது 2015, நவெம்பர் 15ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்படுதல் வேண்டும்.

(4) அறவீடானது ஆணையாளர் தலைமையதிபதியினால் சேகரிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், சேகரிப்புத் திகதியிலிருந்து பதினைந்து நாட்களினுள் திரட்டு நிதியத்திற்கு அனுப்பப்படுதலும் வேண்டும்.

7. (1) ஆறாம் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக அறவீட்டைச் செலுத்துவதற்கு தவறுகின்ற எவரேனும் ஆள், இச்சட்டத்தின் கீழ் தவறுகையாளராகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) எட்டாம் பிரிவின் ஏற்பாடுகள், அத்தகைய எவரேனும் தவறுகையாளருக்கெதிரான குற்றவழக்குக்கும் அத்தகைய தவறுகையிலுள்ள அறவீட்டை அறவிடுவதற்கும் அது தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

8. (1) அறவீட்டுத் தொகை அல்லது அதன் பாகம் தவறுகையில் இருக்குமிடத்து, ஆணையாளர் தலைமையதிபதி, அத்தகைய இடத்தின்மீது நியாயாதிக்கத்தைக் கொண்டுள்ள நீதவானுக்கு, தவறுகைத் தொகை, தவறுகையாளரின் பெயர் மற்றும் அவர் கடைசியாக இருந்ததாக அறியப்பட்ட அவரது வதிவிடத்தின் அல்லது வியாபார இடத்தின் முகவரியாகிய விபரங்களை உள்ளடக்கிய சான்றிதழ் ஒன்றை வழங்குதல் வேண்டும்.

(2) நீதவான் அதன்மீது தவறுகையிலுள்ள அறவீட்டுத் தொகையை அறவிடுவதற்காக தவறுகையாளருக்கு எதிராக ஏன் நடவடிக்கை எடுக்கப்படக்கூடாது என்பதற்கான காரணத்தைக் காட்டுமாறு அவருக்கு அழைப்புவிடுத்தல் வேண்டும்.

(3) தவறுகையாளரால் போதிய காரணம் காட்டப்படாவிடன், தவறுகையிலுள்ள அறவீட்டுத் தொகையானது நீதவானின் கட்டளைமூலம் அத்தகைய தவறுகையாளர் மீது நீதவானால் விதிக்கப்பட்ட குற்றப்பணமொன்று என்றாற் போன்று அறவிடப்படுதல் வேண்டும் என்பதுடன், அறவிடப்பட்டுள்ளபோது திரட்டு நிதியத்திற்கு வரவு வைக்கப்படுவதற்கென ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்பப்படுதலும் வேண்டும்.

9. இச்சட்டத்தின் இப்பாகத்தில், சந்தர்ப்பம் வேறுவகையில் தேவைப்படுத்தினாலன்றி-

“சீட்டாட்டம்” என்பது,

(அ) கொடுப்பனவுடன் அல்லது கொடுப்பனவு இன்றி;

(ஆ) உரிமைப்படியாயினுஞ்சரி அல்லது அல்லாவிடினுஞ் சரி,

பிணையம் ஒன்றுக்காக ஏதேனும் ஆட்டத்தினை ஆடுவதற்காக தனியாட்கள் அணுக்கத்தைக் கொண்டிருக்கும் எவையேனும் வளவுகள் எனப் பொருள்படும் என்பதுடன் பக்கறட், புன்ரோவங்கோ, பிக் சிக்ஸ், பிளக் யக், பவுள், சிமின்-டி-பெர், சுக்-ஏ-லக், கிறவுண் மற்றும் அங்கர், பாறோ, பாறோ பாங், கசாட், போக்கர் டைஸ், பொன்ரூன், அமெரிக்கன் பிரன்ஞ் ரூவே, றெண்ரி-எற்-குவார்ன்ரி, வின்கற்-எற்-அம் அல்லது வீல் ஒப் போச்சூன் அல்லது அமைச்சர் காலத்திற்குக் காலம் ஒழுங்கு விதிகளினால் விதித்துரைக்கும் வேறுஏதேனும் ஆட்டத்தையும் உள்ளடக்கும்;

“ஆணையாளர் தலைமையதிபதி” என்பது, 2006ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்படுவதாகக் கருதப்படும் உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதி எனப் பொருள்படும்;

“ஆள்” என்பது, 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட கம்பனி ஒன்றையும் மற்றும் 2010ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க, சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டத்தின் கீழ் உரிமம் பெற்ற ஆளொருவரையும் அல்லது ஒரு கம்பனியை உள்ளடக்கும்.

## பாகம் III

## அதி ஈட்ட வரி

10. (1) இப்பாகத்தின் மற்றைய ஏற்பாடுகளுக்கு அமைவாக (இதனகத்துப்பின்னர் இப்பாகத்தில் “வரி” எனக்குறிப்பீடு செய்யப்படும்) ஓர் அதிஈட்ட வரி என அழைக்கப்படவேண்டிய வரி ஒன்று-

(அ) 2013, ஏப்பிறல் 1ஆம் திகதியன்று தொடங்கும் வரிமதிப்பீட்டு ஆண்டுக்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றின்படி எந்த ஏதேனும் கம்பனி அல்லது எவரேனும் தனியாளின் வருமான வரிக்கு முன்னரான இலாபம் இருநூறு கோடி ரூபாவை விஞ்சுகின்றதோ அந்த ஏதேனும் கம்பனியின் அல்லது தனியாளின் அத்தகைய வரிமதிப்பீட்டாண்டிற்கான வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின்மீது இருபத்தைந்து *சதவீதத்தில்* அத்தகைய கம்பனியிடமிருந்து அல்லது தனியாளிடமிருந்து;

(ஆ) எந்தக் கம்பனிகள் குழுவில் எல்லாத் துணைநிலைக் கம்பனிகளதும் மற்றும் கொளிக் கம்பனியினதும் 2013, ஏப்பிறல் 1ஆம் திகதி தொடங்கிய வரி மதிப் பீட்டாண்டுக்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களின்படி வருமானவரிக்கு முன்னரான இலாபத்தின் கூட்டு மொத்தம் இருநூறு கோடி ரூபாவை விஞ்சும் ஏதேனும் அத்தகைய கம்பனிகளின் குழு ஒவ்வொன்றினதும் அத்தகைய வரிமதிப்பீட்டாண்டுக்கான வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம், அத்தகைய ஏதேனும் கம்பனியின் வருமான வரிக்கு முன்னரான இலாபம் இருநூறு கோடி ரூபாவை விஞ்சியுள்ளமை எவ்வாறிருப்பினும், அதன் மீது இருபத்தைந்து *சதவீதத்தில்* அக்கம்பனிகளின் குழுவிடமிருந்து;

ஆயின் எவ்வாறாயினும், 2013, ஏப்பிறல் 1ஆம் திகதியன்று தொடங்கிய வரிமதிப்பீட்டாண்டுக்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுகளின்படி கம்பனிகளின் குழுவின் ஏதேனும் கம்பனியின் வருமான வரிக்கு முன்னரான இலாபம் இருநூறு கோடி ரூபாவை விஞ்சுமிடத்து, ஆனால் 2013, ஏப்பிறல் 1ஆம் திகதியன்று தொடங்கிய வரிமதிப்பீட்டாண்டுக்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றின்படி கம்பனிகளின் குழுவிலுள்ள எல்லா துணைநிலைக் கம்பனிகளினதும் மற்றும் கொளிக் கம்பனியினதும் வருமான வரிக்கு முன்னரான இலாபங்களின் கூட்டு மொத்தம் இருநூறு கோடி ரூபாவை விஞ்சாதவிடத்து, வரியானது அத்தகைய கம்பனியிடமிருந்து அறவிடப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கத்திற்காக, “வரிமதிக்கப்படற்பாலதான வருமானம்”-

(அ) 1978ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17ஆம் பிரிவின்கீழ் இலங்கை முதலீட்டுச் சபையுடன் உடன்படிக்கை ஒன்றைச் செய்துள்ளதும் அத்தகைய உடன்படிக்கைக்கிணங்க தீர்மானிக்கப்பட்ட வருமானவரிக்கு பொறுப்பாக வந்துள்ளதும் அத்தகைய உடன்படிக்கையில் தரப்பட்டுள்ள வரிவிலக்களிப்புக் காலம் அதன் காலப்பகுதி முடிவடைந்த பின்னர் ஒரு கம்பனி தொடர்பில் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றின்படி, அத்தகைய கம்பனியின் வருமான வரிக்கு முன்னரான இலாபம் எனப் பொருள்படும்;

(ஆ) பந்தி (அ)வில் குறிப்பீடு செய்யப்பட்ட கம்பனிகள் தவிர்ந்த தனியாள் ஒருவர் அல்லது கம்பனி ஒன்று தொடர்பாக 2006ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்கீழ் அத்தகைய சொல்லமைப்புக்குக் குறித்தொதுக்கப்பட்ட அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) இப்பாகத்தின் கீழ் வரி செலுத்துவதற்கு ஆளான எவரேனும் தனியாள் அல்லது ஒரு கம்பனி, அத்தகைய தனியாளின் அல்லது

கம்பனியின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் மீது வரிமதிப்பீடு எதுவும் செய்யப்பட்டிருக்கவில்லை என்பது எவ்வாறிருப்பினும், 2015, ஒத்தோபர் 31ஆம் நாளன்று அல்லது முன்னர், நவெம்பர் 30ஆம் நாளன்று அல்லது முன்னர் மற்றும் திசெம்பர் 31ஆம் நாளன்று அல்லது முன்னராக என மூன்று தவணைக் கட்டணங்களாக வரி செலுத்துதல் வேண்டும்.

(4) வரியானது, ஆணையாளர் தலைமையதிபதியினால் சேகரிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், சேகரிப்புத் திகதியிலிருந்து பதினைந்து நாட்களினுள் திரட்டு நிதியத்திற்கு அனுப்பப்படுதலும் வேண்டும்.

(5) இப்பாகத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்துவதற்கு அவசியமாகக்கூடியவாறான ஏற்பாடுகள் இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்படுதல் வேண்டும்.

(6) மூன்றாம் உட்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு, (1)ஆம் உட்பிரிவின்கீழ் கணிப்பீடு செய்யப்பட்ட வரியை, ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செலுத்துதல், கம்பனிகள் குழுவொன்றின் ஒவ்வொரு துணைநிலைக் கம்பனியினதும் கொளிக் கம்பனியினதும் கடமையாதல் வேண்டும்.

(7) கம்பனிகள் குழுவொன்றினது ஒரு துணைநிலைக் கம்பனியின் அல்லது கொளிக் கம்பனியின் ஏதேனும் பின்னரான ஒழித்துக்கட்டற் செயற்பாடானது, இப்பாகத்தின்கீழ் வரியை செலுத்துவதற்கான பொறுப்பிலிருந்து அத்தகைய ஏதேனும் கம்பனியை விடுவித்தலாகாது.

(8) வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக ஏதேனும் ஏற்பாடு எவ்வாறிருப்பினும்-

(அ) இப்பாகத்தின்கீழ் அறவிடப்படும் வரியானது, 2013, ஏப்பிறல் 1ஆம் திகதியன்று தொடங்கிய வரிமதிப்பீட்டாண்டு தொடர்பான நிதிக் கூற்றில் செலவினமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்;

(ஆ) இப்பாகத்தின் கீழான வரிக்கொடுப்பனவிற்கு ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்காக 2006ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்கீழ் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானக் கணிப்பீட்டில் கழிப்பனவு எதுவும் வழங்கப்படலாகாது;

(இ) இப்பாகத்தின் கீழான வரிக்கொடுப்பனவிற்கு 2002ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தின்கீழ் செலுத்தப்படற்பாலதான வரிக் கணிப்பீட்டில் கழிப்பனவு எதுவும் வழங்கப்படலாகாது;

(ஈ) இப்பாகத்தின் கீழான வரிக்கொடுப்பனவிற்கு 2009ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிச் சட்டத்தின் கீழ் செலுத்தற்படற்பாலதான வரிக் கணக்கீட்டில் கழிப்பனவு எதுவும் வழங்கப்படலாகாது.

11. (1) இப்பாகத்தின் கீழ் வரியை செலுத்துவதற்கு ஆளாகியுள்ள ஏதேனும் கம்பனி, தனியாள் அல்லது கம்பனிகளின் ஒரு குழு இப்பாகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு அத்தகைய வரியை செலுத்துவதற்கு தவறியுள்ளவிடத்து, அத்தகைய கம்பனி, தனியாள் அல்லது கம்பனிகளின் ஒரு குழு என்பன இச்சட்டத்தின்கீழ் வரிசெலுத்தத் தவறியவராகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) 2006ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் அத்தியாயம் XII, அத்தியாயம் XXII, அத்தியாயம் XXIII, அத்தியாயம் XXIV, அத்தியாயம் XXV, அத்தியாயம் XXVI, அத்தியாயம் XXVII, அத்தியாயம் XXX மற்றும் அத்தியாயம் XXXI இன் ஏற்பாடுகள் அத்தகைய எவரேனும் தவறுகையாளருக்கு அவர் தொடர்பிலும் *ஏற்றமாற்றங்களுடன்* ஏற்புடையனவாதல் வேண்டும்.

12. இச்சட்டத்தின் இப்பாகத்தில் சந்தர்ப்பம் வேறு வகையில் தேவைப்படுத்தினாலன்றி-

"ஆணையாளர் தலைமையதிபதி", "கம்பனி" மற்றும் "வரிமதிப்பீட்டாண்டு" என்பன 2006ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்கீழ் முறையே அச்சொற்றொடர்களுக்குக் குறித்தொதுக்கப்பட்ட அதே பொருள்களைக் கொண்டிருக்கும்;

"கம்பனிகளின் குழு" என்பது, கொளிக் கம்பனி ஒன்றும் அதனது துணைநிலைக் கம்பனிகளும் எனப்பொருள்படும்;

"கொளிக்கம்பனி" என்பது, இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டதும் 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் XVIII ஆம் அத்தியாயத்தின் கீழ் பதிவுசெய்யப்படாததுமான கொளிக் கம்பனியொன்று தவிர்ந்த வேறு நேரடியாக அல்லது மறைமுகமாக வேறொரு கம்பனியின் வாக்களிக்கும் உரிமையுடன் ஐம்பது *சதவீதத்திற்கு* மேற்பட்ட பங்குகளின் உரிமை கொண்ட ஒரு கம்பனி எனப் பொருள்படும்;

"துணைநிலைக் கம்பனி" என்பது, எந்தக் கம்பனி ஒன்றில் வாக்களிக்கும் உரிமையுடன் அதனது பங்குகளின் ஐம்பது *சதவீதத்திற்கு* மேற்பட்ட பங்குகள் நேரடியாக அல்லது இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டதும் 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் XVIII ஆம் அத்தியாயத்தின்கீழ் பதிவுசெய்யப்படாததுமான கொளிக் கம்பனியொன்றின் இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டதும் கம்பனிகள் சட்டத்தின் XVIII அத்தியாயத்தின்கீழ் பதிவுசெய்யப்படாததுமான துணைநிலைக் கம்பனியொன்று தவிர நேரடியாகவல்லாது இன்னொரு கம்பனியினால் வைத்திருக்கப்படுகின்றனவோ அந்தக் கம்பனி எனப் பொருள்படும்.

## பாகம் IV

### செல்லிடத் தொலைபேசி தொழிற்படுத்துநர் அறவீடு

13. (1) (இதனகத்துப்பின்னர் இப்பாகத்தில், "அறவீடு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) உரிமம் பெற்ற செல்லிடத் தொலைபேசி இயக்குனர் அறவீடு என அழைக்கப்படவேண்டிய இரண்டு கோடி ஐம்பது இலட்சம் ரூபாவைக் கொண்ட அறவீடு ஒன்று 2015, மாச்சு 31ஆம் திததியன்றுள்ளவாறு உரிமம் பெற்ற செல்லிடத் தொலைபேசி இயக்குனர் எனும் தொழிலில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு ஆளின் மீது அறவிடப்படுதல் வேண்டும்.

(2) அறவீடானது, 2015ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 15ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) (இதனகத்துப்பின்னர் இப்பாகத்தில், "ஆணைக்குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1991ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க, இலங்கை தொலைத்தொடர்புச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் அறவீடானது சேகரிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் சேகரிப்புத் திகதியிலிருந்து பதினைந்து நாட்களினுள் திரட்டு நிதியத்திற்கு அனுப்பப்படுதலும் வேண்டும்.

14. (1) பதின்மூன்றாம் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு அறவீட்டைச் செலுத்துவதற்கு தவறுகின்ற எவரேனும் ஆள், இச்சட்டத்தின்கீழ் தவறுகையாளராகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) பதினைந்தாம் பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய தவறுகையாளருக்கெதிரான குற்றவழக்குக்கும் அத்துடன் தவறுகையிலுள்ள அத்தகைய அறவீட்டை அறவிடுவதிலும் அது தொடர்பிலும் ஏற்புடையதாதல் வேண்டும்.

15. (1) அறவீட்டுத் தொகை அல்லது அதன் பாகம் தவறுகையில் உள்ளவிடத்து, ஆணைக்குழு, அத்தகைய இடத்தின் மீது நியாயாதிக்கத்தைக் கொண்ட நீதவானுக்கு தவறுகையாளரின் தவறுகையிலுள்ள அறவீட்டுத் தொகை மற்றும் பெயர் மற்றும் அவர் கடைசியாக இருந்ததாக அறியப்பட்ட வதிவிடமும் அல்லது வியாபார இடம் என்பவற்றின் முகவரி ஆகிய விபரங்களைக் கொண்ட சான்றிதழ் ஒன்றை வழங்குதல் வேண்டும்.

(2) நீதவான் அதன் மீது, தவறுகையிலுள்ள அறவீட்டுத் தொகையை அறவிடுவதற்காக தவறுகையாளருக்கெதிராக ஏன் நடவடிக்கை எடுக்கப்படக்கூடாது என்பதற்கான காரணத்தைக் காட்டுமாறு அவருக்கு அழைப்பு விடுத்தல் வேண்டும்.

(3) தவறுகையாளரால் போதிய காரணம் காட்டாவிடின், தவறுகையிலுள்ள அறவீட்டுத் தொகையானது நீதவானின் கட்டளை மூலம் அத்தகைய தவறுகையாளரின் மீது நீதவானால் விதிக்கப்பட்ட குற்றப்பணம் என்றாற் போன்று அறவிடப்படுதல் வேண்டுமென்பதுடன் அறவிடும் போது திரட்டு நிதியத்திற்கு வரவு வைக்கப்படுவதற்கு ஆணைக்குழுவுக்கு அனுப்பப்படுதலும் வேண்டும்.

16. இச்சட்டத்தின் இப்பாகத்தில், சந்தர்ப்பம் வேறு வகையில் தேவைப்படுத்தினாலன்றி-

"உரிமம் பெற்ற செல்லிடத் தொலைபேசி இயக்குனர்" என்பது, 1991ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க, இலங்கை தொலைத் தொடர்புச் சட்டத்தின் 17ஆம் பிரிவின் கீழ் உரிமம் பெற்ற, பொது பணம் செலுத்தும் தொலைபேசிச் சேவையை வழங்குவதற்கு மாத்திரம் அதிகாரம் பெற்ற இயக்குனர் ஒருவர் தவிர்ந்த வேறு இயக்குனர் ஒருவர் எனப் பொருள்படும்;

"ஆள்" என்பது, கூட்டிணைக்கப்பட்டதாயினுஞ்சரி அல்லது கூட்டிணைக்கப்படாததாயினுஞ்சரி ஆட்கள் குழுவொன்றை உள்ளடக்கும்.

## பாகம் V

## செய்மதி அமைவிட அறவீடு

17. (1) (இப்பாகத்தில் இதனகத்துப்பின்னர் "அறவீடு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) செய்மதி அமைவிட அறவீடு என அழைக்கப்பட வேண்டிய நூறு கோடி ரூபாவான அறவீடொன்று, 2015, மாச்சு 31ஆம் திகதியன்று செய்மதிகளுக்கு உரிமையானவரும் இலங்கை செய்மதி அமைவிடங்களைப் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்பட்டவருமான எவரேனும் ஆளிடமிருந்து அறவிடப்படுதல் வேண்டும்.

(2) அறவீடானது 2015, நவெம்பர் 15ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) அறவீடானது (இப்பாகத்தில் இதனகத்துப்பின்னர் "ஆணைக்குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1991ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க, இலங்கைத் தொலைத்தொடர்புச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைத் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் சேகரிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் சேகரிப்புத் திகதியிலிருந்து பதினைந்து நாட்களினுள் திரட்டு நிதியத்திற்கு அனுப்பப்படுதலும் வேண்டும்.

18. (1) பதினேழாம் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு அறவீட்டை செலுத்துவதற்கு தவறுகின்ற எவரேனும் ஆள் இச்சட்டத்தின்கீழ் தவறுகையாளராகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) பத்தொன்பதாம் பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய எவரேனும் தவறுகையாளருக்கு எதிரான குற்ற வழக்குக்கும் அத்துடன் தவறுகையிலுள்ள அத்தகைய அறவீட்டினை அறவிடுவதற்கும் அது தொடர்பிலும் ஏற்புடையதாதல் வேண்டும்.

19. (1) அறவீட்டுத் தொகை அல்லது அதன் பாகம் தவறுகையில் உள்ளவிடத்து, ஆணைக்குழு, அத்தகைய இடத்தின்மீது நியாயாதிக்கத்தைக் கொண்ட நீதவானிற்கு தவறுகையாளரின் தவறுகைத் தொகை, பெயர் மற்றும் அவர் கடைசியாக இருந்ததாக அறியப் பட்ட வதிவிடத்தின் அல்லது வியாபார இடத்தின் முகவரியாகிய விபரங்களைக் கொண்ட சான்றிதழ் ஒன்றை வழங்குதல் வேண்டும்.

(2) நீதவான் அதன்மீது தவறுகையிலுள்ள அறவீட்டுத் தொகையை அறவிடுவதற்காக தவறுகையாளருக்குகெதிராக ஏன் நடவடிக்கை எடுக்கப்படக்கூடாது என்பதற்கான காரணத்தைக் காட்டுமாறு தவறுகையாளருக்கு அழைப்பு விடுத்தல் வேண்டும்.

(3) தவறுகையாளரால் போதிய காரணம் காட்டப்படாவிடின், தவறுகையிலுள்ள அறவீட்டுத் தொகையானது, நீதவானின் கட்டளைமூலம் அத்தகைய தவறுகையாளரின்மீது நீதவானால் விதிக்கப்பட்ட குற்றப்பணம் என்றாற் போன்று அறவிடப்படுதல் வேண்டுமென்பதுடன் அறவிடும் போது திரட்டுநிதியத்திற்கு வரவு வைக்கப்படுவதற்கு ஆணைக்குழுவுக்கு அனுப்பப்படுதலும் வேண்டும்.

20. இப்பாகத்தில், சந்தர்ப்பம் வேறு வகையில் தேவைப்படுத்தினாலன்றி-

"இலங்கை செய்மதி அமைவிடம்" என்பது செய்மதி ஊடாக சேவைகளை வழங்குகின்ற மற்றும் பெறுகின்ற நோக்கத்திற்காக சர்வதேச தொலைத்தொடர்புச் சங்கத்தினால் இலங்கைக்கு ஒதுக்கப்பட்ட சுற்றுவழித்துண்டம் எனப் பொருள்படும்;

"ஆள்" என்பது கூட்டிணைக்கப்பட்டதாயினுஞ்சரி அல்லது கூட்டிணைக்கப்படாததாயினுஞ்சரி ஆட்கள் குழு வொன்றை உள்ளடக்கும்.

## பாகம் VI

## அர்ப்பணிக்கப்பட்ட விளையாட்டுகள் அலைவரிசை அறவீடு

21. (1) (இப்பாகத்தில் இதனகத்துப்பின்னர் "அறவீடு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நூறு கோடி ரூபாவைக் கொண்ட அர்ப்பணிக்கப்பட்ட விளையாட்டுகள் அலை வரிசை அறவீடு என அழைக்கப்படவேண்டிய அறவீடொன்று, 2015, சனவரி மாதம் 29ஆம் திகதியில் உள்ளவாறான ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட அலைகடத்தும் அமைவிடங்களைப் பயன்படுத்தி, 1982ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க, இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட பதிவுச்சான்றிதழ் ஒன்றின் அதிகாரத்தின் கீழ் 2015, மாச்சு 31ஆம் திகதியன்றுள்ளவாறு இலங்கை முழுவதும் அர்ப்பணிக்கப்பட்ட விளையாட்டுக்கள் அலைவரிசையினை தொழிற்படுத்தும் தொழிலைக்கொண்டு நடாத்துகின்ற ஒவ்வொரு ஆளின்மீதும் விதிக்கப்படுதல் வேண்டும்.

(2) அறவீடானது 2015, நவெம்பர் 15ஆம் திகதியன்று அல்லது அதற்குமுன்னர் செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) அறவீடானது (இப்பாகத்தில் இதனகத்துப்பின்னர் "ஆணைக்குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1991ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க, இலங்கைத் தொலைத்தொடர்புச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைத் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால்

சேகரிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் சேகரிப்புத் திகதியிலிருந்து பதினைந்து நாட்களினுள் திரட்டு நிதியத்திற்கு அனுப்பப்படுதலும் வேண்டும்.

22. (1) இருபத்தோராம் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு அறவீட்டை செலுத்துவதற்கு தவறுகின்ற எவரேனும் ஆள் இச்சட்டத்தின்கீழ் தவறுகையாளராகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) இருபத்திமூன்றாம் பிரிவின் ஏற்பாடுகள் தவறுகையாளருக்கெதிராக குற்றவழக்குக்கும் அத்துடன் தவறுகையிலுள்ள அத்தகைய அறவீட்டினை அறவிடுவதற்கும் அது தொடர்பிலும் ஏற்புடையதாதல் வேண்டும்.

23. (1) அறவீட்டுத் தொகை அல்லது அதன் பாகம் தவறுகையில் உள்ளவிடத்து, ஆணைக்குழு அத்தகைய இடத்தின் மீது நியாயாதிக்கத்தைக் கொண்ட நீதவானுக்கு தவறுகையாளரின் தவறுகைத் தொகை, பெயர் மற்றும் அவர் கடைசியாக இருந்ததாக அறியப்பட்ட வதிவிடம் அல்லது வியாபார இடத்தின் முகவரியாகிய விபரங்களைக் கொண்ட சான்றிதழ் ஒன்றை வழங்குதல் வேண்டும்.

(2) நீதவான் அதன்மீது, தவறுகையிலுள்ள அறவீட்டுத் தொகையை அறவிடுவதற்காக தவறியவருக்கு எதிராக ஏன் நடவடிக்கை எடுக்கப்படக்கூடாது என்பதற்கான காரணத்தைக் காட்டுமாறு அவருக்கு அழைப்பு விடுத்தல் வேண்டும்.

(3) தவறுகையாளரினால் போதிய காரணம் காட்டாவிடின், தவறுகையிலுள்ள அறவீட்டுத் தொகையானது, நீதவானின் கட்டளை மூலம் அத்தகைய தவறுகையாளரின் மீது நீதவானால் விதிக்கப்பட்ட குற்றப்பணம் என்றாற் போன்று அறவிடப்படுதல் வேண்டுமென்பதுடன் அறவிடும் போது திரட்டு நிதியத்திற்கு வரவு வைக்கப்படுவதற்கு ஆணைக்குழுவுக்கு அனுப்பப்படுதலும் வேண்டும்.

24. இச்சட்டத்தின் இப்பாகத்தில், சந்தர்ப்பம் வேறுவகையில் தேவைப்படுத்தினாலன்றி-

"அர்ப்பணிக்கப்பட்ட விளையாட்டுக்கள் அலைவரிசை" என்பது எந்தவொரு தொலைக்காட்சி அலைவரிசை ஒளிபரப்பு நேரத்தின் தொண்ணூறு *சதவீதத்தினை* விளையாட்டுக்கள் தொடர்புபட்ட நிகழ்ச்சித்திட்டங்களை ஒளிபரப்புச் செய்வதற்கு ஒதுக்கியிருக்கின்றதோ அந்தத் தொலைக்காட்சி அலைவரிசை எனப் பொருள்படும்;

"ஆள்" என்பது கூட்டிணைக்கப்பட்டதாயினுஞ்சரி அல்லது கூட்டிணைக்கப்படாததாயினுஞ்சரி, ஆட்கள் குழுவொன்றை உள்ளடக்கும்.

## பாகம் VII

### மாளிகை வரி

25. (1) (இப்பாகத்தில் இதனகத்துப்பின்னர் "வரி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) மாளிகை வரி என அழைக்கப்பட வேண்டிய ஆண்டொன்றுக்கு பத்து இலட்சம் ரூபா வரியொன்று 2000, ஏப்பிறல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் நிர்மாணிக்கப்பட்ட மாளிகை ஒன்றின் ஒவ்வொரு உரிமையாளர் மீதும் 2015, ஏப்பிறல் 1ஆம் திகதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஒவ்வொரு ஆண்டுக்கும் அறவிடப்படுதல் வேண்டும்.

(2) வரியானது முறையே பின்வருமாறு நான்கு சமமான தவணைக் கட்டணங்களில் செலுத்தப்படுதலும் வேண்டும்:-

(அ) இயைபான வரிமதிப்பீட்டாண்டின் யூலை பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் முதலாவது தவணைக்கட்டணம்;

(ஆ) இயைபான வரி மதிப்பீட்டாண்டின் ஒத்தோபர் பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் இரண்டாவது தவணைக்கட்டணம்;

(இ) இயைபான வரி மதிப்பீட்டாண்டின் அடுத்துறும் ஆண்டில் சனவரி பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் மூன்றாவது தவணைக்கட்டணம்;

(ஈ) இயைபான வரிமதிப்பீட்டாண்டின் அடுத்துறும் ஆண்டின் ஏப்பிறல் பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் நான்காவது தவணைக் கட்டணம்.

(3) வரியானது ஆணையாளர் தலைமையதிபதியினால் சேகரிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் சேகரிப்புத் திகதியிலிருந்து பதினைந்து நாட்களினுள் திரட்டு நிதியத்திற்கு அனுப்பப்படுதலும் வேண்டும்.

(4) ஏதேனும் கட்டிடத்தின் பெறுமதியை தீர்மானிப்பதில் ஆக்கப்படக்கூடிய ஏதேனும் சீராக்கம் உள்ளடங்கலான இப்பாகத்தில் ஏற்பாடுகளை அமுல்படுத்துவதற்கு அவசியமாக இருக்கக் கூடியவாறான ஏற்பாடுகள், இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின்மூலம் விதித்துரைக்கப்படுதல் வேண்டும்.

26. (1) இப்பாகத்தின்கீழ் வரியைச் செலுத்துவதற்கு பொறுப்புடையவரான மாளிகையொன்றின் சொந்தக்காரர் ஒருவர் இப்பாகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறான அத்தகைய வரியைச் செலுத்துவதற்கு தவறுகின்றவிடத்து, அவர் இச்சட்டத்தின்கீழ் வரித்தவறுகையாளராகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) 2006ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் அத்தியாயம் XII, அத்தியாயம் XXII , அத்தியாயம் XXIII, அத்தியாயம் XXIV , அத்தியாயம் XXV , அத்தியாயம் XXVI, அத்தியாயம் XXVII, அத்தியாயம் XXX மற்றும் அத்தியாயம் XXXI என்பவற்றின் ஏற்பாடுகள் அத்தகைய எவரேனும் தவறுகையாளருக்கும் அவர் தொடர்பிலும் *ஏற்றமாற்றங்களுடன்* ஏற்புடையதாதல் வேண்டும்.

27. இச்சட்டத்தின் இப்பாகத்தில் சந்தர்ப்பம் வேறுவகையில் தேவைப்படுத்தினாலன்றி-

"ஆணையாளர் தலைமையதிபதி" என்பது, 2006ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்படுவதற்கு கருதப்பட்ட உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதி எனப் பொருளாகும்;

"மாளிகை" என்பது வதிவிட நோக்கத்திற்காக 2000ஆம் ஆண்டு ஏப்பிறல் 1ஆம் திகதியன்றோ அல்லது அதன் பின்னரோ நிர்மாணிக்கப்பட்ட எந்தக் கட்டிடம், அது அமைந்துள்ளதோ உள்ளூரதிகார இடப்பரப்பின் உள்ளூரதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்ட கட்டிடவரைபடத்தின்படி பத்தாயிரம் சதுரஅடிக்கு குறையாத நிலப்பரப்பை அல்லது ஏதேனும் இயைபான ஆண்டின் ஏப்பிறல் முதலாம் நாள் உள்ளவாறான அத்தகைய கட்டிடத்தின் பெறுமதி அரசாங்க பிரதான விலைமதிப்பீட்டாளரால் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் குறித்துரைக்கப்படக்கூடிய ஏதேனும் சீராக்கத்தைச் செய்த பின்னர் தீர்மானிக்கப்பட்டதாக பதினைந்து கோடி ரூபாவிற்கு குறையாததான அந்தக் கட்டிடம் என்று பொருளாகும் என்பதுடன் ஒரு கூட்டாட்சி ஆதனம் ஒன்றின் விடயத்தில், அத்தகைய ஆதனத்தின் கூட்டாட்சி ஆதனக்கூறு இப்பாகத்தின் நோக்கங்களுக்காக ஒரு கட்டிடமாக கணிக்கப்படுதலும் வேண்டும்;

"மாளிகை ஒன்றின் உரிமையாளர்" என்பது காணியின் சொத்தாண்மையை ஆளுகின்ற எழுத்திலான சட்டங்களுக்கிணங்க, எந்தக் காணியில் இயைபான மாளிகை அமைந்துள்ளதோ அந்தக் காணியின் சொத்தாண்மையைக் கொண்டுள்ள ஒரு ஆள் அல்லது ஆட்கள் எனப் பொருள்படுமென்பதுடன் கூட்டாட்சி ஆதனமொன்றாக இருக்கும் சந்தர்ப்பத்தில், அத்தகைய ஆதனத்தின் கூட்டாட்சி ஆதன அலகொன்றின் உரிமையாளர் இப்பாகத்தின் நோக்கங்களுக்காக மாளிகையொன்றின் உரிமையாளராகக் கருதப்படுதல் வேண்டும்.

## பாகம் VIII

### குடியகல்வு வரி

28. (1) இரண்டாயிரத்து பதினைந்து நவெம்பர் 1ஆம் திகதியிலிருந்து பயனுறும் வகையில் (இப்பாகத்தில், இதனகத்துப் பின்னர் "வரி" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) குடியகல்வுவரியென அழைக்கப்பட வேண்டிய ஒரு வரி, இலங்கையிலிருந்து நிரந்தரமாக வெளியேறுகின்ற எவரேனும் இலங்கைப் பிரசையிடமிருந்து அத்தகைய பிரசையினால் நாட்டிலிருந்து வெளியேறும் போது கொடுக்கப்படவேண்டிய விடுவிக்கப்பட்ட வெளிநாட்டு செலாவணியின்மீது இருபது *சதவீதப்படி* அறவிடப்படுதல் வேண்டும்.

(2) வரியானது, ஆணையாளர் தலைமையதிபதியால் சேகரிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் சேகரிப்புத் திகதியிலிருந்து பதினைந்து நாட்களினுள் திரட்டு நிதியத்திற்கு வரவு வைக்கப்படுதலும் வேண்டும்.

(3) இப்பாகத்தின் ஏற்பாடுகளை அமுல்படுத்துவதற்கு அவசியமாக இருக்கக்கூடியவாறான ஏற்பாடுகள் இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்படுதல் வேண்டும்.

29. இச்சட்டத்தின் இப்பாகத்தில் சந்தர்ப்பம் வேறுவகையில் தேவைப்படுத்தினாலன்றி-

"ஆணையாளர் தலைமையதிபதி" என்பது, 2006ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்படுவதாகக் கருதப்பட்ட உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதி எனப் பொருள்படும்;

"இலங்கைப் பிரசை" என்பது (349ஆம் அத்தியாயமான) பிரசாவுரிமைச் சட்டத்தின்கீழ் அத்தகைய சொல்லமைப்புக்கு குறித்தொதுக்கப்பட்ட அதே கருத்தைக் கொண்டுள்ளது;

## பாகம் IX

### மோட்டார் வாகன இறக்குமதியாளர்கள் உரிமக் கட்டணம்

30. (1) (இப்பாகத்தில், இதனகத்துப்பின்னர் "கட்டணம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) மோட்டார் வாகனங்கள் இறக்குமதியாளர்கள் உரிமக் கட்டணம் என அழைக்கப்படும் ஆண்டொன்றுக்கு பதினைந்து இலட்சம் ரூபாவைக் கொண்ட கட்டணமொன்று மோட்டார் வாகனங்களின் ஒவ்வொரு இறக்குமதியாளர்களிடமிருந்து 2016, சனவரி 1ஆம் திகதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஒவ்வொரு ஆண்டுக்கும் அறவிடப்படுதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும் தனிப்பட்ட பாவனைக்காக மோட்டார் வாகனம் ஒன்றை இறக்குமதி செய்கின்ற எவரேனுமாள் கட்டணம் செலுத்துவதற்கு ஆளாதல் ஆகாது.

(2) தனிப்பட்ட பாவனைக்காக இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வாகனம் ஒன்றின் சொத்தாண்மை (1)ஆம் உட்பிரிவின் கீழ் செலுத்தப்படாத கட்டணம் தொடர்பில் அத்தகைய இறக்குமதியாளர் மோட்டார் வாகன ஆணையாளர் தலைமையதிபதியின் திருப்திக்கு வர்த்தக நோக்கமெதுவுமில்லையென்று நிருபித்தாலன்றி இறக்குமதியாளரின் பெயரில் அத்தகைய மோட்டார் வாகனத்தின் பதிவுத் திகதியிலிருந்து நான்கு ஆண்டு காலப்பகுதி ஒன்றுக்கு இரண்டாவது உரிமையாளர் ஒருவருக்கு கைமாற்றப்படுதல் ஆகாது:

ஆயின், எவ்வாறாயினும் மோட்டார் வாகனம் தொடர்பில் வங்கி ஒன்றுடன், நிதிக் கம்பனியுடன் அல்லது நிதிக் குத்தகை தாபனத்துடன் இறக்குமதியாளரால் செய்துகொள்ளப்பட்ட ஒரு வாடகைக் கொள்வனவு உடன்படிக்கைக்கான அல்லது நிதிக் குத்தகை உடன்படிக்கைக்கான பிணையமொன்றாக 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டத்தின்கீழ் உரிமம் பெற்ற ஏதேனும் வங்கிக்கு அல்லது 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க, நிதித்தொழில் சட்டத்தின் கீழ் உரிமம்பெற்ற ஏதேனும் நிதிக் கம்பனிக்கு அல்லது 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க, நிதிக்குத்தகை சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட ஏதேனும் நிதிக் குத்தகை தாபனத்துக்கு அத்தகைய மோட்டார் வாகன சொத்தாண்மைக் கைமாற்றம் இப்பிரிவின் நோக்கங்களுக்காக சொத்தாண்மைக் கைமாற்றமொன்றாகக் கருதப்படலாகாது.

(3) கட்டணமானது 2016, சனவரி 1ஆம் திகதியன்று அல்லது பின்னர் தொடங்குகின்ற ஒவ்வொரு ஆண்டுக்கும் இயைபான ஆண்டின் முற்போந்த ஆண்டின் திசெம்பர் முப்பத்தோராம் திகதியன்று அல்லது முன்னர் செலுத்தப்படுதல் வேண்டும்.

(4) கட்டணமானது விதித்துரைக்கப்பட்ட முறையில் மோட்டார் வாகன ஆணையாளர் தலைமையதிபதியினால் சேகரிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் சேகரிப்புத் திகதியிலிருந்து பதினைந்து நாட்களினுள் திரட்டு நிதியத்திற்கு அனுப்பப்படுதலும் வேண்டும்.

(5) இப்பாகத்தின் ஏற்பாடுகளின் அமுல்படுத்தலுக்காக அவசியமாக இருக்கக்கூடியவாறான ஏற்பாடுகள் இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்படுதல் வேண்டும்.

31. (1) முப்பதாம் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு கட்டணத்தை செலுத்துவதற்கு தவறுகின்ற எவரேனும் ஆள், இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் தவறுகையாளராகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) முப்பத்திரெண்டாம் பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய தவறுகையாளருக்கு எதிரான குற்றவழக்குக்கும் அத்துடன் தவறுகையிலுள்ள அத்தகைய கட்டணத்தை அறவிடுவதற்கும் அது தொடர்பிலும் ஏற்புடையதாதல் வேண்டும்.

32. (1) கட்டணத் தொகை அல்லது அதன் பாகம் தவறுகையில் உள்ளவிடத்து, மோட்டார் வாகன ஆணையாளர் தலைமையதிபதி, அத்தகைய இடத்தின்மீது நியாயாதிக்கத்தைக் கொண்ட நீதவானிற்கு தவறுகையாளரின் தவறுகைத் தொகை, பெயர் மற்றும் அவர் கடைசியாக வதிந்ததாக அறியப்பட்ட வதிவிடம் அல்லது வியாபார இடம் என்பவற்றின் முகவரியாகிய விபரங்களைக் கொண்ட சான்றிதழ் ஒன்றை வழங்குதல் வேண்டும்.

(2) நீதவான் அதன்மீது, தவறுகையிலுள்ள கட்டணத் தொகையை அறவிடுவதற்காக தவறுகையாளருக்கு எதிராக ஏன் நடவடிக்கை எடுக்கப்படக்கூடாது என்பதற்கான காரணத்தைக் காட்டுமாறு அவருக்கு அழைப்பு விடுத்தல் வேண்டும்.

(3) தவறுகையாளரால் போதிய காரணம் காட்டப்படாதுவிடின், தவறுகையிலுள்ள கட்டணத் தொகையானது, நீதவானின் கட்டளை மூலம் அத்தகைய தவறுகையாளரின் மீது நீதவானால் விதிக்கப்பட்ட குற்றப்பணம் என்றாற் போன்று அறவிடப்படுதல் வேண்டுமென்பதுடன் அறவிடும் போது திரட்டு நிதியத்திற்கு வரவு வைக்கப்படுவதற்கு மோட்டார் வாகன ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்பப்படுதலும் வேண்டும்.

33. இச்சட்டத்தின் இப்பாகத்தில் சந்தர்ப்பம் வேறுவகையில் தேவைப்படுத்தினாலன்றி-

"மோட்டார் வாகன ஆணையாளர் தலைமையதிபதி" என்பது (203ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 204ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்படும் மோட்டார் வாகன ஆணையாளர் தலைமையதிபதி எனப் பொருள்படும்;

"மோட்டார் வாகனம்" என்பது பதினாறு பயணிகளுக்கு குறைவான பயணிகள் கொள்ளளவைக் கொண்ட ஒரு மோட்டார் கார், இரட்டை நோக்க வாகனம், கனரகமற்ற மோட்டார் வண்டி மற்றும் இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் மூலம் விதித்துரைக்கப்பட்ட வேறு ஏதேனும் வாகனம் எனவும் பொருள்படும்.

## பாகம் X

### பொது

34. இச்சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட அறவீடு, வரி அல்லது கட்டணம் ஒன்றின் கொடுப்பனவில் தவறுகை ஆட்கள் குழுவொன்றினால் ஆக்கப்படுகின்றவிடத்து, அவ்வாட்கள் குழு-

(அ) கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக, அக்குழுவின் ஒவ்வொரு பணிப்பாளர் மற்றும் அலுவலராக இருப்பின்; அல்லது

(ஆ) குழுமம் ஒன்றாக, அக்குழுமத்தின் ஒவ்வொரு பங்காளராக இருப்பின்; அல்லது

(இ) குழுமம் ஒன்று தவிர்ந்த வேறு கூட்டிணைக்கப்படாத குழுவொன்றாக, அதனது முகாமைத்துவ மற்றும் கட்டுப்பாட்டுக்கு பொறுப்பான அக்குழுவின் ஒவ்வொரு அலுவலராக இருப்பின்;

இச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு அத்தகைய அறவீடு, வரி அல்லது கட்டணம் அறவிடுவதற்கு எதிராக குற்றவழக்கு தொடர்வதற்கு ஆளாகியிருத்தல் வேண்டும்.

35. (1) எக்கருமங்கள் தொடர்பில் இச்சட்டத்தின்கீழ் ஒழுங்கு விதிகள் ஆக்கப்பட அதிகாரமளிக்கப்படுகின்றதோ அல்லது விதித்துரைக்கப்பட தேவைப்படுத்தப்படுகின்றதோ அக்கருமங்கள் தொடர்பில் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் ஒவ்வொன்றும் *வர்த்தமானியில்* வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய வெளியீட்டுத் திகதியன்று அல்லது அதனகத்துள் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் *வர்த்தமானியில்* வெளியிடப்பட்ட பின்னர் வசதியானளவு விரைவாகப் பாராளுமன்றத்தின் முன்னர் அங்கீகாரத்துக்கெனகொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எவற்றிற்கும் பங்கமின்றி அதற்கான அங்கீகாரம் மறுக்கப்பட்ட திகதியிலிருந்து இல்லாதாக்கப்பட்டதாக கருதப்படுதல் வேண்டும்.

(4) ஒழுங்குவிதி எதுவும் எத்திகதியன்று அவ்வாறு இல்லாதாக்கப்பட்டதென கருதப்படுகின்றதோ அத்திகதி பற்றிய அறிவிப்பு *வர்த்தமானியில்* வெளியிடப்படுதல் வேண்டும்.

36. இச்சட்டத்தில் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

### அட்டவணை

1. வளவுகளில் நுகரப்படாத வெளிநாட்டு மதுபான விற்பனைக்கான சில்லறை விற்பனை உரிமம் (உள்ளூரில் தயாரிக்கப்பட்ட வெளிநாட்டு மதுபானம் உள்ளடங்கலாக) (மதுவரி F.L.4)
2. ஹோட்டல்களிலுள்ள வதிவிடங்களிற்கு (உள்ளூரில் தயாரிக்கப்பட்ட மோல்ட் மதுபானம் உள்ளடங்கலாக) வெளிநாட்டு மதுபானத்தினை வழங்குவதற்கான உரிமம் (மதுவரி F.L.7)
3. வளவுகளில் நுகரப்பட வேண்டிய வெளிநாட்டு மதுபான விற்பனைக்காக பொதுமக்களின் களியாட்ட இடமொன்றிற்கான மதுச்சாலை உரிமம். (உள்ளூரில் தயாரிக்கப்பட்ட மோல்ட் மதுபானம் உள்ளடங்கலாக) (மதுவரி F.L.9)
4. சிற்றுண்டி அறையொன்றில் அல்லது புகையிரதத்தில் இணைக்கப்பட்டுள்ள உணவுவண்டி ஒன்றில் வெளிநாட்டு மதுபானத்தை விற்பனை செய்வதற்கான உரிமம். (உள்ளூரில் தயாரிக்கப்பட்ட மோல்ட் மதுபானம் உள்ளடங்கலாக) (மதுவரி F.L.10)
5. சிற்றுண்டி அறை அல்லது உணவுச்சாலை ஒன்றில் வெளிநாட்டு மதுபானத்தை விற்பதற்கான உரிமம். (உள்ளூரில் தயாரிக்கப்பட்ட மோல்ட் மதுபானம் உள்ளடங்கலாக) (மதுவரி F.L.11)
6. வாடி வீடு ஒன்றில் வெளிநாட்டு மதுபானத்தை விற்பதற்கான உரிமம். (உள்ளூரில் தயாரிக்கப்பட்ட மோல்ட் மதுபானம் உள்ளடங்கலாக) (மதுவரி F.L.12)
7. களரி வியாபார பெயரில் பதிவுசெய்யப்பட்ட ஒன்றில் வெளிநாட்டு மதுபானத்தை விற்பதற்கான உரிமம். (உள்ளூரில் தயாரிக்கப்பட்ட மோல்ட் மதுபானம் உள்ளடங்கலாக) (மதுவரி F.L.13)
8. உறுப்பினர்கள் மட்டும் எனும் களரிகளிலும், சமூக மற்றும் பொழுதுபோக்கு களரியிலும் வெளிநாட்டு மதுபான விற்பனைக்கான உரிமம். (உள்ளூரில் தயாரிக்கப்பட்ட மோல்ட் மதுபானம் உள்ளடங்கலாக) (மதுவரி F.L.13 அ)
9. பியர், ஏல், ஸ்ரவுட் மற்றும் வைன்கள் போன்றவற்றின் விற்பனைக்கான உரிமத்தை பெறுவதற்கான விசேட சில்லறை உரிமம். (மதுவரி F.L.22 அ)
10. வளவுகளில் நுகரப்பட வேண்டிய பியர், ஏல், ஸ்ரவுட் மற்றும் வைன்கள் என்பவற்றின் சில்லறை விற்பனைக்கான உரிமம். (மதுவரி F.L.22 ஆ)

# 2015 ஆம் ஆண்டின் இலங்கை மத்திய வங்கியினதும் இலங்கையிலுள்ள வங்கித்தொழில் நிறுவனங்களினதும் செயற்பாடுகள் மற்றும் தொழிற்பாடுகள் தொடர்பான ஏனைய சட்டவாக்கங்கள்

1. 2015 இன் 9 ஆம் இலக்க உள்நாட்டு அரசிறைச் சட்டம் (திருத்தம்)
2. 2015 இன் 11 ஆம் இலக்க பெறுமதிசேர் வரிச் சட்டம் (திருத்தம்)
3. 2015 இன் 12 ஆம் இலக்க நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிச் சட்டம் (திருத்தம்)
4. 2015 இன் 13 ஆம் இலக்க பொருளாதார சேவைகள் கட்டணச் சட்டம் (திருத்தம்)

5 2015 இன் 14 ஆம் இலக்க பந்தயம் மற்றும் விளையாட்டு அறவீட்டுச் சட்டம் (திருத்தம்)